மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகள் காப்பகத்திலே இருக்கின்ற குழந்தைகளுக்கும் சீருடை வழங்கவேண்டும் என்று பல்வேறு கோரிக்கைகள் வரப்பெற்று, அது அரசினுடைய பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. இரா. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு மையங்களிலிருந்து, துணை மையங் களாகச் செயல்பட்டுக் கொண்டிருப்பது—குழந்தைகள் குறை வாக இருக்கிற காரணத்தால் துணை மையங்களாகச் செயல் பட்டுக் கொண்டிருக்கின்றன. அந்த மையங்கள் ஆண்டு கால அளவில், 100 எண்ணிக்கைக்கு மேலாக இருக்கிற குழந்தைகள் வருகிறபடியால், அதையே மெயின் சென்டராக ஆக்குவதற் கான, மேம்பாடு அடைவதற்கான வாய்ப்பு இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 70 குழந்தைகளுக்குக் குறையா மல் இருந்தால் ஒரு மையம் ஆரம்பிக்கலாம். 30 அல்லது 40 குழந்தைகள் இருக்கின்ற இடங்களிலேதான் துணை மையங் களை நாம் நிறுவியிருக்கிறோம். அந்த 40 குழந்தைகள் இருக்கிற இடம், திடீரென்று 100 குழந்தைகள் இருக்கிற மையங் களாக மாறுகின்றது என்றால், ஜனத்தொகை வேகமாகப் பெருகுகிறது என்று பொருள். ஆகவே, அரசாங்கத்தினுடைய திட்டத்துடன் நாம் ஒத்துழைக்கவேண்டும். ஆனாலும், அவர்களுக்கு அந்த மையங்கள், நிரந்தர மையங்களாக இல்லாவிட்டாலும் சமைக்கின்ற இடத்திலிருந்து கொண்டு போய் கொடுப்பதை எந்தக் காரணத்தை முன்னிட்டும் நிறுத்தாமல் இந்த அரசு வழங்கிக் கொண்டே இருக்கும்.

திருச்சி—தஞ்சை நெடுஞ்சாலையிலுள்ள குவளை வாய்க்கால்

506. (*வினா எண். 3988). திரு. எம். அண்ணாதாசன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி- தஞ்சை நெடுஞ்சாலையில் திருவெறும்பூர் பகுதியில் ஓடுகின்ற குவளை வாய்க்காலில் மழைக் காலங் களில் உடைப்பு ஏற்பட்டு, திருவெறும்பூர், வேங்கூர், நடராஜ புரம், அரசங்குடி ஆகிய ஊர்களில் உள்ள விளைநிலங்கள் பாதிக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) இந்த வாய்க்காலை அகலப்படுத்தி பாதிப்பு ஏற்படாமல் தடுக்க அரசு செலவிட்ட தொகை எவ்வளவு ?

1987 ஏப்ரல் 25]

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இவ்வாய்க்காலை அகலப்படுத்தி மேம்பாடு செய்யும் பணிகளுக்கு ரூ. 61,800-க்கு மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு, இதுவரை ரூ. 50,600 செலவிடப்பட்டுள்ளது.

குமரி மாவட்டம், நீரேற்றுத் திட்டங்கள்

507 (*வினா எண். 8007). திரு. எப். எம். இராசரத்தினம் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டம், இரணியல்-வள்ளியாறு நீரேற்றுத் திட்டம், இராசாக்கமங்கலம்—பன்றி வாய்க்கால் நீரேற்றுத் திட்டம், ஆகிய திட்டங்கள் பற்றி அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதுபற்றிய விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மேற்கண்ட இரண்டு திட்டங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த கோதையாறு நீர்ப்பாசன மேம்பாட்டுத் திட்டத்தை தலைமைப் பொறியாளர் (ஆய்வு) தயாரித்து வருகிறார்.

திரு. வை. பாலச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இரண்டு திட்டங்களும் உடனடியாக நிறைவேற்றப்படவேண்டிய திட்டங்கள் என்று அங்கே இருக்கின்ற மக்கள் விரும்புகிறார்கள். ஆகவே, அந்த வேலை எப்போது ஆரம்பிக்கப்படும் ? அது எப்போது முடிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது யு.எஸ். எய்டோடு நடக்கின்ற திட்டம். ஆகவே, அது மத்திய அரசாங்கத்திலே ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டு இருக்கிற நேரத்தில் அவர்கள் ஒரு சில தகவல்களை எங்கள் மத்தியிலே கேட்டு இருந்தார்கள். அதை நாங்கள் தெரிவித்து இருக்கிறோம், அந்தத் திட்டத்திற்கு ரூ. 4,289 இலட்சங்கள் ஆகும்.